IslamHouse.com

Osoul Center
www.osoulcenter.com

# ஸுன்னாவைப் பின்பற்றுவதன் அவசியம்

தமிழ்
Tamil
تاميلي


ஆக்கம்

**அஷ்ஷேஹ் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் (ரஹ்)**

தமிழில்

**எம். ஜே. எம். ரிஸ்மி (அப்பாஸி)**

மீள்பரிசீலனை

**எம். எஸ். எம். பாஹிர் (கபூரி)**

**எம். அஹ்மத் (அப்பாஸி)**

# التمسك

# بالسنة النبوية واثاره


مـركز أصول

ترجمة

محمد رزمي محمد جنيد

مراجعة

محمد فاخر زبير

أحمد محمد



Tamil

தமிழ்

تاميلي

ح المكتب التعاوني للدعوة والإرشاد و توعية الجاليات بالربوة، ١٤٤١هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

مركز أصول للمحتوى الدعوي

التمسك بالسنة النبوية واثاره / سلسلة مؤلفات فضيلة الشيخ (٧٨) – اللغة التاميل. / مركز أصول للمحتوى الدعوي؛ محمد رمزي جنيد. - الرياض، ١٤٤١هـ

٤٤ ص، ١٢ سم x ١٦,٥ سم

ردمك : ٣-٩٦-٨٢٤٩-٦٠٣-٩٧٨

١- السنة النبوية ٢- البدع في الاسلام أ. جنيد، محمد رمزي (مترجم)

ب. العنوان

ديوي ٢٥١,١٢ ١٤٤١/٤٥١٥

رقم الايداع: ١٤٤١/٤٤٥١٥٥٠٢

ردمك : ٣-٩٦-٨٢٤٩-٦٠٣-٩٧٨

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.sa

www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்...



சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனை நாம் போற்றுகிறோம். அவனிடமே உதவியும் வேண்டுகிறோம். அல்லாஹ்வைக் கொண்டு எமது உள்ளத்திலிருந்து தோன்றும் கெடுதிகள் எமது செயலின் கெடுதிகள் யாவற்றிலிருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ்வைத்தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை என்று சான்று பகர்கின்றேன். அவன் தனித்தவன். அவனுக்கு எந்த இணையும் கிடையாது. மேலும் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதருமாவார் என்றும் சான்று பகர்கின்றேன். அன்னாரை அவன் சத்திய வேதத்தையும் நேர்வழியையும் கொடுத்து தூதனுப்பினான். அவர்கள் தாம் சுமந்த தூதை எத்திவைத்தார்கள். தன்னிடம் தரப்பட்ட அமானிதத்தை நிறை வேற்றினார்கள். உம்மத்துக்குப் போதனை செய்தார்கள். அல்லாஹ்வின் பாதையில் உண்மைப் போராட்டம் செய்தார்கள். அல்லாஹ்வின் சாந்தியும் சமாதனமும் அன்னார் மீது உண்டாவதாக. மேலும் அன்னாரது கிளையார் தோழர், மற்றும் இறுதிநாள் வரை பின் தொடர்ந்தோர் அனைவர்மீதும் உண்டாவதாக.

1419 வது வருடம் ரஜப் மாதம் ஒன்பதாவது நாளான வியாழன் இரவாகிய இன்று மதீனாவாசிகளான எனது சகோதரர்களாகிய சிலரை இஸ்லாமிய பல்கலைக் கழக மாநாட்டு மண்டபத்தில் சந்திப்பது குறித்து

மகிழ்ச்சியடைகிறேன். இச்சந்திப்பை அருள் நிறைந்த பயனுள்ள சந்திப்பாக ஆக்க வேண்டுமென அல்லாஹ்வை வேண்டுகிறேன்.

இன்றைய உரையின் தலைப்பு "ஸுன்னாவைக் கடைப்பிடிப்பதன் பயன்பாடுகள்" என்பதாகும். அதாவது நபிகளாரின் ஸுன்னா அல்குர்ஆனுக்கு ஒன்று விட்ட சகோதரராகும். குர்ஆனைக் கொண்டும் அமல் செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது போலவே ஸுன்னாவைக்கொண்டும் அமல் செய்ய வேண்டுமென அடியார்கள் கட்டளை இடப்பட்டுள்ளனர். அதன் நிமித்தம் அடியாருக்கு ஆதாரமாக நிற்கும் அது குர்ஆனுக்கு ஒன்று விட்ட சகோதரனாகும்.

ஸுன்னா என்றால் நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றில் இருந்து பெறப்பட்டதாகும். அல்குர்ஆனைக் கொண்டு செயல்படுவது எவ்வாறு அவசியமோ அவ்வாறே அஸ்ஸுன்னாவைக் கொண்டு செயற்படுவதும் கட்டாயமானதாகும். அல்குர்ஆனை ஆதாரமாக எடுக்கும்போது ஆதாரமாகக் கொள்ளப்படும் வசனம் அறிவிப்பது என்ன என்பதையிட்டு அவதானம் செலுத்த வேண்டும். இவ்விடயத்தில் மனிதர்கள் தம் அறிவுக்கும் விளக்கத்துக்கும் ஏற்ப வேறுபடுவர். அல்குர்ஆனை விளக்கும் விசயத்தில் தம் அறிவுக்கும் விளக்கத்துக்கும் ஏற்ப வித்தியாசப்படுவது போலவே தம் விசுவாசம், அல்லாஹ்வின் சங்கையை பேணுவதில் உள்ள நம்பிக்கைக்கேற்ப வேறுபடுவர்.

ஸுன்னாவை ஆதாரம் கொள்வோர் இரண்டு அவதானங்களை செலுத்துவது அவசியம். முதலாவது நபி (ஸல்) அவர்களிலிருந்து அறிவிக்கப்பட்டதன் உண்மைத் தன்மையில் அவதானம் தேவையாகும். ஏனெனில் ஹதீஸ்களில் பலவீனமான (ழஈபான)வைகளும் இட்டுக் கட்டப்பட்டவை (மவ்ழூஉ)களும் ஊடுருவி உள்ளன. எனவே ஹதீஸை ஆதாரம் கொள்பவர் அதன் உண்மை (ஸிஹ்ஹத்) தன்மை, அது பதியப்பட்டுள்ளமை என்பன பற்றி அவதானிக்க வேண்டும்.

எனவேதான் ஹதீஸ்கலை வல்லுணர்கள் அவற்றை அறிவித்தவர்களின் வரலாற்றைப்பதிந்து நூற்களை எழுதியுள்ளனர். அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிய வேண்டும். மேலும் சரியான ஹதீஸைப் பிழையானதிலிருந்து தெரிந்து தெளிவு பெறுவதற்காக ஹதீஸ்கலைப் பரிபாசைகளை "அல்முஸ்தலஹ்" என்ற நாமமிட்டு எழுதினர்.

இரண்டாவது அவதானம் யாதெனில் அல்குர்ஆனில் செலுத்தும் அவதானம் போன்றதாகும். ஆதாரமாகக் கொள்ளப்பட்ட வசனத்தின் அறிவிப்பு பற்றிய அவதானம். இவ்விடயத்தில் மனிதர்கள் மிகவும் வேறுபடுகின்றனர். அல்லாஹ் தன் தூதருக்கு இவ்வாறு அறிவித்தான்.

﴿وَأَنزَلَ ٱللَّهُ عَلَيۡكَ ٱلۡكِتَٰبَ وَٱلۡحِكۡمَةَ﴾ [النساء: ١١٣]

"நபியே உமக்கு வேதநூலையும், ஞானத்தையும் இறக்கிவைத்துள்ளோம் "(04:113).

இதிலே குறிப்பிடப்பட்டுள்ள "அல்ஹிக்மா" (ஞானம்) என்ற சொல்லுக்கு விளக்கம் கூறிய அறிஞர்கள் அது நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவைக்குறிக்கிறது என்று விளக்கம் தந்துள்ளனர். அல்லாஹ் தன்னையும் தன் தூதரையும் வழிப்படுமாறு பின்வருமாறு கட்டளையிட்டுள்ளான்.

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ﴾ [النساء: ٥٩]

"ஈமான் கொண்டோர்களே, அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள். மேலும் (அவனது) தூதருக்கும் வழிப்படுங்கள்" (04:59) நபியைப் வழிப்படுவது என்பது ஸுன்னாவை ஆதாரமாகக் கொள்வதைக்குறிக்கிறது. எனவே ஸுன்னா சன்மார்க்க ஆதாரங்களிலொன்றாக இருப்பது மாத்திரமன்றி அதனை செயற்படுத்துவது அவசியம் என்பதையும் காட்டுகிறது. மேலும்

﴿وَمَن يَعۡصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَإِنَّ لَهُۥ نَارَ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًا﴾ [الجن: ٢٣]

"யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாற்றம் செய்வாரோ அவருக்குரிய இடம் நரகமாகும். அதிலே அவர் நீடூழி காலம் இருப்பார்" (அல்ஜின்:23). நபிக்கு மாற்றமாக நடப்பவர்களுக்கு கூறப்பட்டுள்ள எச்சரிக்கைகள் மூலம் அஸ்ஸுன்னாவும் அல்குர்ஆன் போன்று முற்றிலும் ஆதாரமாகக் கொள்ளப்பட வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

அல்குர்ஆன் இப்படி கூறுகிறது:

﴿وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمۡ عَنۡهُ فَٱنتَهُواْ﴾ [الحشر: ٧]

“அல்லாஹ்வின் தூதர் உங்களிடம் கொண்டு வந்தவற்றை எடுத்து கொள்ளுங்கள் அவர் தடுத்தவற்றை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்” *(அல்ஹஷ்ர்-07)* இவ்வசனம் யுத்தத்திலீட்டிக் கொள்ளப்பட்ட *(கனீமா)* பொருளோடு தொடர்பு பட்டதேயாயினும் அப்பொருள்கள் ரஸூலுல்லாஹ் *(ஸல்)* அவர்களின் இஜ்திஹாத் எனும் தற்துணிவு கொண்ட முயற்சி மூலமே பங்கீடு செய்யப்படும். அப்பங்கீட்டை மனமொப்பி ஏற்க வேண்டுமேயாயின் ஷரீஅத்தீர்ப்புக்களில் அது முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகவே விளங்குகின்றது.

பின்வறுமாறு அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

﴿ لَّقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا۟ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْءَاخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴾ [الأحزاب: ٢١]

“அல்லாஹ்வின் (சந்திப்பை) எதிர்பார்த்தும் இறுதிநாளை விசுவாசித்தும் அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவுகூர்ந்தும் வருவோருக்கு அல்லாஹ்வுடைய தூதரிலே உங்களுக்கு நல்ல முன்மாதிரி திட்டவட்டமாக இருந்து வருகிறது.”*(33:21)* நபியை பின்பற்றுவதென்பது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குர்ஆனின் பொருளை எடுத்துக்காட்டும் வண்ணம் செய்தவைகளையும், அன்னாரால் சட்டமாகக் கூறி செயற்படுத்தப்பட்டவைகளையும் உள்ளடக்குகிறது.

நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆப் பிரசங்கத்தின் போது கீழ்வருமாறு பிரகடனப் படுத்திக் கூறினார்கள்:

“நிச்சயமாக செய்திகளிற் சிறந்தது அல்லாஹ்வின் வேத நூலாகும். நேர்வழிகளிற் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழியாகும்”. மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அன்னாரது வழிமுறையை (ஸுன்னாவைக்) கடைப் பிடிக்குமாறு வலியுறுத்தினார்கள். ‹நீங்கள் எனது வழிமுறையையும் எனக்குப்பின் நேர்வழி பெற்ற குலபாஉர் ராஷிதூன்களின் (கலீபாக்களினதும்) வழிமுறையையும் கடை பிடியுங்கள். அவ்வழியை இறுகப்பிடியுங்கள் அதற்காக கடைவாய்ப் பல்லை கடித்துக் கொண்டேனும் இருங்கள். (திர்மிதி)

இக்கருத்தைத் தரும் ஹதீஸ்கள் அனேகம் உள்ளன.

எனவே அல்குர்ஆனிலிருந்து மாத்திரமே செயற்பட முடியுமென்பவன் நட்டமும் கைசேதமும் அடைந்தவனாவான். இது மாபெரிய முரண்பாடான வார்த்தையுமாகும். அவ்வாறு அல்குர்ஆனில் உள்ளதைக் கொண்டு மாத்திரம் செயற்படுவோர்க்கு நாம் கூறுவது யாதெனில் நபியைப் பின்பற்றுமாறு அல்குர்ஆன் கூறுகிறது. உமது கூற்றிலே நீர் உண்மையாளனாயின் ஸுன்னாவிலே வந்துள்ள தீர்ப்பை ஏற்றுக் கொள்வதும் அவசியமாகிறது.

மேற்கண்டவாறு ஸுன்னாவை நிராகரிக்கும் ஒரு சாரார் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் “என்னுடைய செய்தியொன்று வருகின்றபோது அது பற்றி நாம் அறியோம், அல்லாஹ்வின் வேத நூலில் உள்ளதையே பின்பற்றுவோம் என்று தன் சாய்மானத்தில் சாய்ந்த நிலையில்

கூறும் நிலை உங்களை வந்தடையாதிருக்கட்டும்". அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக நான் "அல்கிதாப்" எனப்படும் அல்குர்ஆனையும் அதுபோன்ற ஒன்றையும் பெற்றுள்ளேன்.

மேலும் அல்குர்ஆன் வசனங்களில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளதை அஸ்ஸுன்னா எனும் நபிவழியன்றி வேறொன்றும் விளக்க வில்லை. (ஸுன்னாவைப் பின்பற்ற முடியா தென்றால் அல்குர்ஆனில் சுருக்கிச் சொல்லப்பட்ட எந்தவொரு வசனத்தையும் பின் பற்ற முடியாது), இது மாபெரிய ஆபத்தாகும். ஆதலால்தான் நாம் பின்வருமாறு கூறுகிறோம். "நிச்சயமாக நபியின் ஸுன்னா (எனும் வழிமுறை) அல்குர்அன் போன்றதே ஆகும். அதில் காணப்படும் ஆதாரங்களுக் கேற்ப வாஜிப் (கட்டாயமானது) முஸ்தஹப் (விருப்பத்துக்குரியது). முபாஹ் (ஆகுமானது) மக்ரூஹ் (வெறுப்புக்குரியது) என்பன உள்ளன. அல்குர்ஆனில் இவைகளுக்குரிய சட்டங்களே ஸுன்னாவிலும் காணக்கிடைக்கிறது".

நம் முன்னோர்களான (ஸலபுஸ் ஸாலிஹீன்கள்) நல்லோர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து யாதேனும் கட்டளைகள் வந்தால் அது அல்லாஹ்விடமிருந்து வந்த ஒன்றாகவே ஏற்று செயற்பட்டார்கள். அதை மீறி நடக்கவும் மாட்டார்கள். அதில் எந்த அசிரத்தையும் காட்ட மாட்டார்கள் (ரஸூலின் கட்டளையென்பது அல்லாஹ்வின் கட்டளை என்றே அமல் செய்தனர்.)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஏதேனும் கட்டளையிட்டால் இது கட்டாயமானதா?

விருப்பத்துக்குரியதா? என்று ஒரு போதும் கேட்கவில்லை. விபரங்களேதும் கேட்காமலே செயற்படுவர். ஆகையால்தான் சில மக்களிடமிருந்து இது கட்டாயமா? விருப்பத்துக்குரியதா? எனக் கேட்கப்படுவதைப் பார்த்துக் கவலையாக இருக்கிறது.

﴿أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡ﴾ [النساء: ٥٩]

"அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள். மேலும் ரஸூலுக்கும் உங்கள் காரியகர்த்தர்களுக்கும் வழிப்படுங்கள்" *(04:59).* அதாவது கட்டளையிடப் பட்டதைச் செய். அது கட்டயாமெனில் செய்ததுடன் உன் பொறுப்பு நீங்கிவிட்டது. விருப்பத்துக்குரியதாக அது இருந்திருப்பின் நன்மை தரும் ஒன்றை நீர் நிறை வேற்றியவனாகிறாய்.

நபி (ஸல்) அவர்கள் தம் தோழருக்கு ஏதேனும் கட்டளைகளிட்ட சமயம் அவர்கள் இது கட்டாயமானதா? விருப்பத்துக்குரியதா? என்று கேட்டதாக நிரூபிக்க எவராலும் முடியாது. ஆம்! நபி (ஸல்) அவர்கள் ஏதேனும் ஒரு சமிக்ஞை விட்டால் அதுபற்றி விளக்கம் கேட்பர். இதற்கு நாம் "பரீரா" என்ற அடிமைப் பெண்ணின் விவகாரத்தை ஆதாரமாகக் கொள்ளலாம். அவள் ஒரு அடிமைப்பெண் "முகீஸ்" என்ற ஒருவர் அவளை மணம் புரிந்திருந்தார். ஆயிஷா (ரலி) அவர்கள் அந்த அடிமையை விடுதலை செய்தார்கள். அவள் உரிமையிடப்பட்டபோது நபி (ஸல்) அவர்கள் அப்பெண்ணுக்கு தன் கணவனோடு வாழ அல்லது அவனை விட்டும் பிரிந்து வாழ சுயேச்சைத்

தேர்வுக்கு விட்டார்கள். அவள் கணவனை விட்டும் பிரிய வேண்டுமென்பதைத் தேர்ந்தெடுத்தாள். கணவனோ அவளை விட்டும் பிரிய விரும்பாமல் பாதை நெடுகிலும் மதீனா கடைத்தெருவிலும் அழுது புலம்பி அவளைத் தொடர்ந்து கொண்டேயிருந்தான். இதன் மூலம் தன் மனைவி அவளின் முடிவை மாற்றிக்கொள்ள கூடுமென எதிர்ப்பார்த்தான். அவள் மறுத்தே நின்றாள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அப்பெண்ணுக்கு தன் கணவன் முகீஸுடன் சென்று வாழுமாறு சமிக்ஞை செய்தார்கள். அதற்கு அப்பெண்மனி அல்லாஹ்வின் தூதரே தாங்கள் கட்டளையிடுவதாயின் (தலைமேற் சுமந்து) செவியேற்று வழிப்படுகிறேன். அப்படியல்லாது சமிக்ஞையாக இருப்பின் எனக்கு (எனது கணவராகிய) அவரிலே எந்த விருப்பமும் கிடையாது என்று கூறினாள். இங்குதான் வினா தோன்றுகிறது. ரஸூலுல்லாஹ் கூறியது கட்டளையா? அப்படியெனில் உடனே செயற்பட்டிருப்பாள். இல்லையெனில் அவள் விரும்பியபடி நடந்திருக்கலாம்.

மிக முக்கியமானது யாதெனில் எனது மாணவச் சகோதரர்களுக்கு பின்வரும் உபதேசத்தை கூறுவதாகும். அதாவது அல்லாஹ்வினதும் ரஸூலினதும் கட்டளையொன்று வரும் பட்சத்தில் அதில் விபரம் தேடலாகாது என்பதே. அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

﴿إِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِينَ إِذَا دُعُوٓاْ إِلَى ٱللَّهِ وَرَسُولِهِۦ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَن يَقُولُواْ سَمِعْنَا وَأَطَعْنَا﴾

[النور: ٥١]

“தம் மத்தியில் (உள்ளவற்றுக்கு) தீர்ப்புப் பெற

அல்லாஹ்வின் பக்கமும் அவனது தூதர் பாலும் வாருங்கள் என அழைக்கப்பட்டால் (அழைப்பை) செவியேற்றோம் (இதோ) வழிப்பட்டோம் என்று கூறுவதே முஃமின்களின் வார்தையாக இருந்தது". என்றும்

﴿وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى ٱللَّهُ وَرَسُولُهُۥٓ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ ٱلْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ﴾

[الأحزاب: ٣٦]

"ஏதேனும் ஒரு விசயத்தில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தீர்ப்புச் செய்ததன் பின்பு எந்த ஒரு முஃமினான ஆணுக்கோ பெண்ணுக்கோ தம் காரியத்தில் சுயேட்சையாகச் செயல்பட எந்த ஒரு அதிகாரமும் இல்லை" என்றும் அல்லாஹ் குறிப்பிடுவது போல் அல்லாஹ்வினதும் ரஸூலினதும் தீர்ப்புக் கிடைத்துவிட்டால் அதற்கப்பால் செல்லலாகாது என்பதை மாணவர்களாகிய உங்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

ஆம்! ஒரு மனிதன் ஏதேனும் ஒரு கட்டளைக்கு மாறாகச் செய்தால் இக்கட்டளை எவ்வகையைச் சேர்ந்தது எனக் கேட்டு அறிய வேண்டும். அவசியம் நிறைவேற்ற வேண்டிய கட்டளையெனில் செய்த தவறுக்காக பிழை பொறுக்கத் தேட வேண்டும். கட்டாயம் நிறைவேற்ற வேண்டியதை விடுவது பாவமாகும். பாவத்துக்குரிய பரிகாரம் பிழை பொறுக்கத்தேடுவ(தவ்பா செய்வ)தாகும்.

குறித்த கட்டளை கடமையல்லாத விருப்பத்துக்குரியதாயின் கருமம் மிகச் சுலபமாகும். அதற்கு முன்னரோ அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைகளுக்கு தாராளமாக விரிந்து கொடுக்குமாறு

ஆக்கிக் கொண்டு மேலே கூறப்பட்ட வண்ணம் செவியேற்றோம் வழிப் பட்டோம் எனக் கூறுவாயாக! பின்னர் செயலாற்றுவாயாக! அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைகளை செயற்படுத்த விரும்பும் மனிதனுக்கு இதுவே அவசியமாகும்.

மிகவும் முக்கியமானது யாதெனில் மனிதன் சறுக்கி விடாதிருக்கவும் அழிவிற் சேராதிருக்கவும் அஸ்ஸுன்னாவின் சொற் பிரயோகம், அது குறிப்பிடும் ஷரீஅத்தின் உண்மையான கருப்பொருள் அதனைத் தொணிக்கும் ஆதாரங்கள் என்பவற்றை அவன் விளங்க வேண்டும் என்பதாகும். நிச்சயமாக மனிதர்களில் சிலர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை பின்பற்ற வேண்டும் என்பதில் அதிக வேட்கையும் ஆசையும் கொண்டிருப்பர். ஆனால் அவர்கள் சரியென எண்ணிக் கொண்டு செய்வது அவ்வாறில்லாமலிருக்கிறது. இதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு.

உதாரணமாக முதலாவது அத்தஹிய்யாத்திலிருந்து கிளம்பும் ஒருவர் தனது அத்தஹிய்யாத் இருப்பிலே இருந்தவாறு கையை உயர்த்துவது போன்றதாகும். அவ்வாறு செய்வதே ஸுன்னத் என அவர் நினைக்கிறார். ஆனால் இங்கே ஸுன்னத் அவரது செயலுக்கு மாற்றமாகும். அதாவது மூன்றாவது ரக்அத்துக்காக நிலையில் நின்ற பிறகே நபி (ஸல்) அவர்கள் கையை உயர்த்தினார்கள் என்று ஸஹீஹுல் புஹாரி (735) ஹதீஸில் வந்துள்ளது போல் செய்வதாகும்.

இந்த வகையைச்சேர்ந்த மற்றுமோர் உதாரணம் தான் ஸஹாபாக்களின் வார்த்தைகளைப் பிழையாகப்

புரிந்துவைத்துக்கொள்வது. உதாரணமாக‹(நாம்தொழுகைக்கு நின்றால்) எம்மில் ஒருவர் தம் தோழரது குதிகாளோடு ஒட்டியும் தோற்புயம் மற்றவரது தோற்புயத்தோடு ஒட்டியும் இருக்கும்" என்ற செய்தியை இரண்டு கால்களையும் விரித்து அகட்டி, குதிகால்கள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் நிற்பதென விளங்குவதாகும்.

இவ்வாறு விளங்குவது பிழையாகும் ஸஹாபாக்கள் கூறிய வார்த்தையின் பொருள் அதுவன்று. அதன் பொருளாவது தொழுகைக்கு நின்றால் குதிகால்களைப் பார்த்து நெருங்கி நேராக நிற்பர். ஒருவரை மற்றவர் முந்தி நிற்கமாட்டார்கள். அவ்வாறு அவர்கள் தம் கால்களை அகட்டி நிற்பதாயின் அந்த வார்த்தையே கூறப்பட்டிருக்கும். சுருக்கம் என்னவெனில் ஒவ்வொரு ஆதாரங்களும் தரும் கருத்தை சரியாக விளங்கவேண்டும் என்பதாகும். மாணவர்களே நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

## ஸுன்னாவைப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கும் பலாபலன்கள்

1. தான் பின்பற்றுவதற்குரிய ஒரு தலைவரைப் பெற்றுள்ளதாக அறிகிறான். அவர்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) ஆவார்கள். அவ்வாறு அறிபவனது உள்ளத்திலே அந்த ரஸூல்மீது அளவற்ற அன்பு ஏற்பட்டு விடுகிறது. உதாரணமாக இரண்டு பேர் ஸுன்னத்தான முறையில் வுழூ செய்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். ஒருவர் தான் நபி (ஸல்) அவர்கள் வுழூச் செய்வதை நேரடியாக காண்பது

போன்ற உணர்வைப் பெறுகிறார். மற்றவர் இந்த உணர்வற்ற நிலையில் வுழூ செய்கிறார். இந்நிலையில் முதலாமவரின் செயல் அவரது உள்ளத்தில் பாரிய தாக்கத்தை அளிக்கிறது. தான் நபியைப் பின்பற்றுவதாக உணர்கிறான். ‹யார் எனது இந்த வுழூ போன்று வுழூ செய்து பின்னர் இரண்டு ரக்அத்தும் தொழுது அவ்விரண்டிலும் தன் உள்ளத்தில் வேறு எந்த ஒரு ஊசலாட்டமும் கொள்ளவில்லையோ அவரது முன்சென்ற (சிறு) பாவங்களை அல்லாஹ் மன்னித்தருள்கிறான்" (புஹாரி-160) என்ற ஹதீஸின் அடிப்படையில் நன்மையை எதிர்பார்த்தவனாகிறான்.

2. அவ்வாறே தான் முஸ்லிம்களில் அதிகம்பேரும் ஸுன்னாப்படியே தம் தொழுகைகள் அமைய வேண்டுமெனப் பிரயத்தனம் கொள்கின்றனர். ‹அல்ஹம்து லில்லாஹ்" சர்வ புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸுன்னத்தான முறையில் தொழுகிறார்கள் என்றாலும் அல்லாஹ்வின் ரஸூலைப் பின்பற்றியே அதனை நிறைவேற்றுகிறார்கள் என்ற உணர்வு அவர்களது உள்ளத்தில் இல்லாதிருக்கிறது. தொழுகையின் ஒவ்வொரு அசைவிலும் ஓதலிலும் அந்த நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறோம் என்ற உணர்வில்லாததால் பராமுகமாகவேயுள்ளனர். எனினும் தொழும் அம்மனிதன், தான் அல்லாஹ்வின் ரஸூலைப்பின்பற்றியே

தொழுவதாகவும் அன்னாரைக் காண்பது போன்றும் உணர்வானாயின் அவனது உள்ளத்தில் மாபெரியதொரு தாக்கத்தைக் கண்டு கொள்வான்.

3. ஸுன்னத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவன் "பித்அத்"தை மறுப்பவனாவான். ஏனெனில்,

**خير الحديث كتاب الله وخير الهدي هدي محمد صلى الله عليه وسلم وشر الأمور محدثاتها**. (ابن ماجه)

"செய்திகளிற் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகளிற் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழியாகும். கருமங்களிற் கெட்டது (மார்க்கத்தில்) புதிதாக உண்டாக்கப் படுபவையாகும்" என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

புதியன என்பது ஸுன்னாவுக்கு எதிர்மறையாக உண்டு பண்ணுவதாகும். அப்படி ஸுன்னாவுக்கு எதிர்மறையான ஒன்று நூதனமாகும். மனிதன் ஒரு ஸுன்னத்தைக் கடைப்பிடிப்பதென்பது அவனை "பித்அத்" எனப்படும் நூதனத்திலிருந்து தூரமாக்கிவிடும். எனவே அவன் பித்அத்துகளைத் தூக்கி எறிவான். அல்லாஹ்வை அவன் அமைத்துத் தந்தமுறையிலன்றி வணங்க முடியாது. இது மாபெரிய பிரதிபலன்களைச் சேர்ந்ததாகும். அதாவது: பித்அத்தை ஒதுக்கி விடுவதென்றால் அவன் ஸுன்னத்தை கடைப்பிடிக்கிறான் பித்ஆவெனும் நூதனத்தை எடுத்து எறிகிறான். அது மாத்திரமன்றி பித்அத்தை வெறுக்கிறான். ஓர் அடியானுக்கு அல்லாஹ் செய்யும் அருட்கொடைகளில் ஒன்று தான் "ஷிர்க்" (இணைவைத்தல்) எனும் நூதனத்தை எடுத்தெறிவது. ஏனெனில் சகல இபாதத் (வணக்க வழிபாடு)

களும் ஷிர்கிலிருந்து நீங்கிய உளத்தூய்மையோடும் பித்அத் (நூதனங்)களிலிருந்து நீங்கிய தூய்மையான பின்பற்றுதலுமின்றி நிறைவேற மாட்டாது.

ஸுன்னாவைப் பின்பற்றுபவன் பெறும் போற்றத்தகு மற்றுமொரு பயன் அவன் மற்றோருக்கு முன்மாதிரியான பின்பற்றத் தகுதியான ஒருவனாக ஆவதாகும். அவனிலே எவரும் ஊடுருவ முடியாது. ஏனெனில் முஸ்லிம்களில் ஒருவரைப் பின்தொடர்ந்து ஏதேனும் ஒரு வழிபாட்டைச் செய்பவனிடம் சிலவேளை கோளாறுகள் நுழையலாம். இதற்கு என்ன ஆதாரம் வைத்துள்ளீர் என மிக இலகுவாகக் கேட்டு விடலாம். ஆனால் ஸுன்னத்தைப் பின்பற்று பவரிடம் இவ்வாறு ஊடுருவ முடியாது. ஆதாரம் எது எனக் கேட்கப்பட்டால் செயல் பற்றியதாயின்; இது நபியின் செயல் என்பான். பேச்சு பற்றியதாயின் இது நபியின் பேச்சு என்பான். அது பாதுகாப்பான கோட்டை. ஏனெனில் அது முஹம்மத் நபியின் வழிமுறையெனும் மதில்களுக்குள்ளே இருக்கிறது.

ஸுன்னாவைப் பின்பற்றுபவன் நபி(ஸல்) அவர்களது அருங்குணங்களைப் பெற்றுக்கொள்கிறான். அருங்குணங்களை சம்பூரணப்படுத்தவே நபி(ஸல்) அவர்கள் தூதனுப்பப்பட்டார்கள். இயல்பாகவே அன்னாரிடம் நற்குணங்களை அல்லாஹ் அமைத்து விட்டான். ஸுன்னாவை ஒருவன் பின்பற்றுவதாயின் அவன் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் குணத்தைப் பெற்றவனாகிறான். அதன் மூலம் அவன் அல்லாஹ்வை நெருங்க முடியும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள்

«**أكمل المؤمنين إيمانا أحسنهم خلقا**». (الترمذي)

முஸ்லிம்களில் சம்பூரணம் பெற்றவர் யாரெனில் அவர்களிலுள்ள நற்குண முடையோரே ஆவர் என்று கூறியுள்ளார்கள்.

ஸுன்னாவைக் கடைப்பிடிப்பவன் காணும் மற்றுமொரு பயன் யாதெனில் அவன் அல்லாஹ்வின் மார்கத்தில் எல்லை மீறி நடக்கும் ஒருவனாக அன்றி ஒரு மத்திய நிலையைக் கடைப்பிடிப்பவனாக இருப்பான். ஏனெனில் அல்லாஹ்வின் "தீன்"(மார்க்கம்) நடுநிலையானது. அதிலே அளவு மீறலில்லை. மேலும் கவனயீனமெனும் பொடுபோக்குமில்லை. இரண்டுக்கும் இடைப் பட்டதாகும். ஸுன்னத்தைப் பின்பற்றுபவன் செயல் அனைத்தும் எல்லைமீறல் கவனயீனம் என்ற இரண்டுமின்றி அல்லாஹ்வை எவ்வாறு வழிப்பட வேண்டுமோ அவ்வாறே அமைந்திருக்கும். ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைத்து நடந்து கொள்வான்.

இவ்விடயமாக நான் இரண்டு உதாரணங்களை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஒன்று விபரமறியாதவனோடு அவனுக்கேற்ப நடப்பது.

மற்றொன்று முரண்டாக நடப்பவனோடு அதற்கேற்ப நடப்பது.

முதலாவது உதாரணம் பள்ளியினுள் சிறுநீர் கழித்த நாட்டுப்புற அரபியின் செய்தியாகும். அந்த மனிதன் மஸ்ஜிதுன் நபவியில் நுழைந்து அதன் ஒரு மருங்கிற் சென்று சிறுநீர் கழிக்க

ஆரம்பித்தார். அங்கிருந்த மனிதர்கள் சப்தமிட்டவர்களாக அம்மனிதனைத் தடுக்க முனைந்தனர். இதைக்கண்ட நபி(ஸல்) அவர்கள் அம்மக்களை நோக்கி நீங்கள் அம்மனிதனின் சிறுநீரை இடைநிறுத்தச் செய்து விடாதீர்கள். விடுங்கள் அவர் சிறுநீரைக் கழித்து முடிக்கட்டும் எனக் கூறினார்கள். ஏன் இவ்வாறு கூறப்பட்டது என்பதை யாரும் புரிந்து கொள்ள வில்லை. சிறுநீர் கழித்து முடிந்ததும் அவ்விடத்தில் ஒரு வாளி தண்ணீரை ஊற்றுமாறு ஸஹாபாக்களுக்கு ஏவினார்கள். பள்ளி அசுத்தப்படுவது தடுக்கப்பட்டது.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அம்மனிதனை அழைத்துக் கூறினார்கள். இந்தப் பள்ளிவாசல்களில் எந்தவொரு அசிங்கமோ அழுக்கோ ஏற்படலாகாது. இவை தொழுகை, குர்ஆன் ஓதல் போன்ற காரியங்களுக்காகவே (நிர்மானிக்கப்பட்டு) உள்ளது என அன்போடு கூறி நபி(ஸல்) அவர்கள் முடிப்பதற்கிடையில் இறைவா எனக்கும் முஹம்மதுக்கும் அருள் புரிவாயாக. எம்மோடு வேறொருவருக்கும் அருள் புரியாதே! (என்று மகிழ்ச்சி மேலீட்டால்) அம்மனிதன் பிரார்த்தனை செய்தான். அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்கள் அம்மனிதனோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைப் பாருங்கள்.

ஸுன்னத்தை கடைப்பிடிப்பதென்பது அல்லாஹ்வின் ரஸூல் (ஸல்) அவர்கள் செய்தது போன்று செய்வதாகும். தெரியாத மனிதனைக் கடியவில்லை, தடுக்கவில்லை, பாவத்துக்குள் தள்ளிவிடவுமில்லை.

இரண்டாவதற்கு உதாரணம் தங்க மோதிரத்தை

அணிந்திருந்த மனிதனது செய்தியாகும். ஒரு மனிதன் தங்க மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதனைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அம்மோதிரத்தைத்; தன் கரத்தாலே கழற்றி எறிந்தார்கள். அத்தோடு உங்களில் ஒருவன் நரக நெருப்பின் துண்டொன்றை தன் கையில் வைத்திருப்பதா? எனக்கூறி தடுத்தார்கள்.. இங்கே நபி(ஸல்) அவர்கள் இம்மனிதனோடும் முன்னர் கூறப்பட்ட நாட்டுப்புற அரபியோடும் நடந்துகொண்ட முறையைப் பாருங்கள். மேற்சொன்னவாறு கூறிய நபி(ஸல்) அவர்கள் திரும்பிச் சென்றபின் சிலர் அம்மனிதனிடம் உமது மோதிரத்தை எடுத்துக் கொள்ளலாமே என்று கூறினர். அதற்கு அந்த மனிதர் நபி(ஸல்) அவர்கள் எடுத்து வீசிய மோதிரத்தை ஒருபோதும் எடுக்க மாட்டேன் என்று கூறிய நிகழ்வு ஸஹீஹ் முஸ்லிமின் பதிவாகும்.

ஸுன்னத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவனை அது பரிவு, இரக்கம், மென்மை, தாழ்மை என்ற அருங்குணங்கள் பால் அழைக்கிறது. நபி(ஸல்) அவர்கள் சிறுவர்களோடு பரிகாசம் பண்ணுவார்கள். அவர்களில் காணப்படும் முரண்பாடுகளைக் கண்டு பொறுமை கொள்வார்கள். அபூஉமைர் என்ற சிறுவன் பறவையொன்றை வைத்திருந்தான். அச்சிறுவன் ஏனைய சிறுவர்கள் போன்று பறவையை வைத்து விளையாடி மகிழ்ந்தான். திடீரென அப்பறவை இறந்தது. நபி(ஸல்) அவர்கள் அச்சிறுவனைப் பரிகாசம் செய்து பின்வருமாறு கூறுவார்கள்:

«يا أبا عمير ما فعل النغير؟».

உமைரின் தந்தையே நுகைருக்கு நடந்ததென்ன? என்று கூறி பரிகசிப்பார்கள். (மனிதரோடு மனந்திறந்து நடக்க வேண்டும் என்ற பகுதி ஸஹீஹுல் புஹாரி-6129)

ஒருநாள் தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள் நபி(ஸல்) அவர்கள். ஸுஜூதிலே இருக்கும்போது அன்னாரது பேரர் ஹஸன் (ரலி) அவர்கள் நபி(ஸல்)அவர்களது முதுகிலே ஏறினார்கள். குழந்தை ஹஸன் முதுகிலிருந்து இறங்கும்வரை நபி(ஸல்) அவர்கள் ஸுஜூதிலிருந்து எழும்பாது தாமதித்தார்கள். தொழுகை முடிந்த பின்பு தன் தோழர்களை நோக்கி தன் பேரப்பிள்ளை முதுகில் ஏறி சவாரி செய்தார் எனவும் அவருடைய ஆசை நிறைவுறும்வரை தாமதித்து இருந்ததாகவும் கூறினார்கள். அன்னார் மீது அல்லாஹ் தன் சாந்தியையும் சமாதானத்தையும் சொரிந்தருள்வானாக.

நம்மில் யாரேனும் இவ்வாறு நடந்து கொள்வோமா! ஒருவேளை சிறுவர்கள் அவ்வாறு செய்தாலும் எல்லாருமே சேர்ந்து அச்சிறுவர்களைக் கடிந்து விடுகிறோம். எனினும் காரூண்ய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் சிறுவர்கள் மீது கொண்ட இரக்கம் காரணமாக அச்சிறுவர்களின் விருப்பத்துக் கேற்ப நடந்து கொண்டார்கள். எம்மில் அநேகர் சிறுவர்கள் மீது பரிவு காட்டுவதில்லை, இரக்கம் காட்டுவதில்லை. மாறாக அவர்களைக் கண்டித்து விடுகிறோம். ஏன்! எவரேனும் ஒரு சிறுவன் அடக்கமாக தான் சபையினுள் நுழைந்தாலும் உடனடியாகவே உள்ளேபோ எனக்கூறி கடிந்து விடுகிறோம். அல்லது வேறேதேனும் கூறிக் கடிந்து பேசுகிறோம். ஏன் இவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்று

வினவப்பட்டால் சபையோரிடம் பாய்ந்து விடுவான் எனப் பயப்படுகிறேன் என்று கூறிவிடுகிறோம். லா இலாஹ இல்லல்லாஹ்! அல்லாஹ் பின் வருமாறு கூறியுள்ளான். *"அல்லாஹ்வின் (சந்திப்பை) எதிர்பார்த்தும் இறுதிநாளை விசுவாசித்தும் அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு படுத்தியும் வருவோருக்கு அல்லாஹ்வுடைய தூதரிலே உங்களுக்கு நல்ல முன்மாதிரி திட்டவட்டமாக இருந்து வருகிறது" (33:21)*

எனவே ஸுன்னத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மாபெரிய போற்றத்தகு பயன்களுண்டு. எனினும் அது ஸுன்னா பற்றி அறிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. ஆதலால் நான் எனது மாணவச்சகோதரர்கள் ஸுன்னாவைப்பற்றி அறிவதில் முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அறிவதன் மூலம் அதன்படி அமல் செய்யலாம். அதன்பால் அழைக்கலாம். நிச்சயமாக அதுவே சிறந்ததும் நிலையானதுமாகும்.

எனது பேச்சின் தொடரிலே நான் ஸுன்னத்தைக் கடைப்பிடிப்பதானது "பித்அத்" எனும் நூதனங்களை வெறுக்கவும் அதனைத் துரத்தவும் தூரப்பட்டிருக்கவும் கட்டுப்பாட்டை உண்டு பண்ணுமெனவும் கூறினேன். இச்சந்தர்ப்பத்தில் இப்போது நாம் இருந்து கொண்டிருக்கும் சங்கை மிகுந்த மாதங்களிலொன்றான "ரஜப்" மாதத்தைப் பற்றியும் சிறிது கூறுவதே பொறுத்தமாகும். இம்மாதத்தில் பேசப்படுகின்ற செய்யப்படுகின்ற விடயங்கள் பற்றி ஏற்கனவே நான் எழுதியுள்ளேன். உங்களுக்குப் பயன் பெறுமென வேண்டி அதனையும் உங்களுக்கு வாசிக்க

விரும்புகிறேன்.

முதலாவது : ரஜப் மாதம் சங்கைமிகு நான்கு மாதங்களில் ஒன்றாகும் தொடராக வரும் துல்கஃதா, துல்ஹிஜ்ஜா, முஹர்ரம் என்பனவே ஏனைய மூன்று மாதங்களுமாகும். ஜுமாதல் ஆகிரா, ஷஃபான் ஆகிய இரண்டுக்குமிடையே ரஜப் தனித்தே உள்ளது. இந்த நான்கு மாதங்களுக்கும் பல விசேடங்கள் உள்ளன. அவற்றில் நாலு மாதங்களும் சம்பந்தப்படுகின்றன. ரஜப் மாதம் மாத்திரம் தனிச்சிறப்புக் கொண்டதல்ல. இந்த நான்கிலும் சிறந்தது எது என்பதில் அறிஞர்கள் பல்வேறு கருத்துக் கொண்டுள்ளனர். ஷாபிஈ மத்ஹபைச்சார்ந்த சிலர் ரஜப் என்கின்றனர். அக்கருத்தைப் பலவீனமானதென இமாம் நவவீ(ரஹ்) அவர்களும் மற்றும் சிலரும் கூறியுள்ளார்கள். ஹஸனுல் பஸரீ(ரஹ்) அவர்கள் முஹர்ரம் தான் சிறப்பானது என அபிப்பிராயப்பட்டார்கள். அதனையே நவவீ (ரஹ்) அவர்களும் கூறியுள்ளார்கள். துல்ஹிஜ்ஜா மாதமே சிறப்பானது என ஸஈத் இப்னு ஜுபைர் (ரஹ்) போன்றோர் கூறியுள்ளனர்.

இக்கருத்தே சரியானது என்பது எனது அபிப்பிராயமாகும். ஏனெனில் அது ஹஜ்ஜுக் குரிய மாதங்களில் ஒன்றாக இருப்பதனாலும் அதிலே தான் ஹஜ்ஜுல் அக்பர் எனப்படும் நாள் இருப்பதனாலும் சங்கைமிகுந்த மாதங்களில் ஒன்றாக அது இருப்பதனாலும் ஆகும்.

இரண்டாவது : ரஜப் மாதத்தை ஜாஹிலிய்யா (அறியாமை) கால மக்கள் கண்ணியப்படுத்தி வந்தனர். அதிலே யுத்தம் புரிவதை

*சங்கைமிகு ஏனைய மாதங்களுக்குப் போன்று தடைவிதித்தனர். இம்மாதத்தில் யுத்தம் புரிவதன் சட்டம் சம்பதந்தமாக அறிஞர்கள் பல்வேறு அபிப்பிராயங்களைக் கூறியுள்ளனர்.*

*அதிகமான அறிஞர்கள் சங்கைமிகுந்த மாதங்களுட்பட அனைத்து மாதங்களிலும் சண்டையிடலாம். சண்டையிடலாகாது எனவுள்ள சட்டம் மாற்றப்பட்டுள்ளது என அபிப்பிராயப்பட்டுள்ளனர். நிச்சயமாக அந்த மாதங்களில் யுத்தம் புரிவது தடுக்கப் பட்டதாகும். ஆனால் எம்மோடு யுத்தம் புரிய வந்தால் அல்லது யுத்தம் புரிய விலக்கில்லா மாதங்களில் ஆரம்பித்த யுத்தம் தடுக்கப்பட்ட மாதத்தில் தொடர்ந்திருப்பது குற்றமில்லை என்பதே சரியான தீர்ப்பாகும்.*

*மூன்றாவது: ரஜப் மாதத்தை அறியாமை (ஜாஹிலிய்யா) க்கால மக்கள் நோன்பு நோற்று கண்ணியப்படுத்தி வந்தனர். எனினும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பாக ரஜப் மாதத்தில் நோன்புபிடித்து சங்கைப் படுத்தியதற்கான சரியான ஆதாரம் எதுவுமே இல்லை. ஷேகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் தம் அல்பதாவா 25/29ல் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.*

*ரஜப் மாதத்துக்கென்று நோன்பு பிடிப்பது பற்றி வந்துள்ள அனைத்து ஹதீஸ்களும் பலவீனமானதாகும். ஏன்! இட்டுக்கட்டப் பட்டவைகளாகும். அறிஞர்கள் அதில் எதையுமே ஆதாரமாகக் கொள்வதுமில்லை. அமல்கள் சிறப்புப் பற்றிக்கூறப்பட்டுள்ள பலவீனமான ஹதீஸ்கள் அல்ல அவை. அவற்றுள் பெரும்பாலானவை இட்டுக்கட்டப்பட்ட பொய்யானவையாகும்.*

உமர் (ரலி) அவர்கள் ரஜப் மாதத்தில் உண்பதைத் தவிர்ந்து கொண்ட சில மனிதரை உணவைப் பரிமாறுமாறு கட்டளையிட்டு வற்புறுத்தியதோடு ரஜபை ரமழானுக்கு ஒப்பாக்கி விடாதீர்கள் எனக் கூறினார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் தம் வீட்டினுள் சென்றார்கள். வீட்டிலுள்ளவர்கள் தண்ணீர் பேழை (கூஜாக்)களை விலை கொடுத்து வாங்கியிருந்ததோடு நோன்பு நோற்கவும் ஆயத்தபடுவது போன்று கண்டு இது என்ன? எனக்கேட்டார்கள். "ரஜப்" என வீட்டார்கள் கூறினார்கள். ரஜபை ரமழானோடு ஒப்பாக்க விரும்புகிறீர்களா என்று கடிந்த ஆபூபக்ர் (ரலி) அவர்கள் அக்கூஜா (பேழை)களை உடைத்தார்கள்.

உமர் (ரலி) அவர்களின் நிகழ்வை அல்ஹாபிழ் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் "அல்லதாஇப்" என்ற நூலில் கூறியுள்ளதோடு ஜாஹிலிய்யாக்கால மக்கள் ரஜப் மாதத்தை சங்கைப்படுத்தி வந்தனர். இஸ்லாத்தின் வருகையின் பின் விடப்பட்டு விட்டது எனவும் குறிப்பிடுகின்றார்கள்.

நான்காவது: ரஜப் மாதத்தை அரேபியர் சங்கைப்படுத்தி வந்தனர். அம்மாதத்திலே அவர்கள் உம்ரா செய்வார்கள். துல்ஹஜ்ஜிலே ஹஜ்ஜு செய்வார்கள். ரஜப்மாதம் அரபு மாதங்களில் நடுவானதாகும். எனவே அதில் உம்ராசெய்வர். வருடத்தின் நடுப்பகுதியிலும் இறுதியிலும் ஹஜ்ஜு செய்வோர், உம்ரா செய்வோர் மூலம் அல்லாஹ்வின் வீட்டை பராமரிக்க நாடியே இவ்வாறு செய்தனர்.

"அல்லதாஇப்" எனும் நூலில் ரஜப் மாதத்தில் உம்ரா செய்வதை உமர்(ரழி) அவர்களும் வேறு சிலரும் விருப்பத்துக்குரிய தெனக்

கண்டனர். ஆயிஷா (ரழி) அவர்கள் இம்மாதத்தில் உம்ரா செய்து வந்தார்கள். இப்னு உமர் (ரழி) அவர்களும் அவ்வாறு செய்தார்கள். முன்னோர்களான ஸலபுஸ் ஸாலிஹீன்களும் செய்து வந்தனர் என இப்னு ஸீரின் அவர்கள் அறிவித்தார்கள்.

ஐந்தாவது: ரஜப் மாதத்தில் "ஸலாத்துல் ரகாஇப்" என்ற தொழுகை நிறைவேற்றப் படுகிறது. இது அம்மாதத்தில் உள்ள முதல் வெள்ளிக்கிழமை மக்ரிபுக்கும் இஷாவுக்கு மிடையில் நிறைவேற்றப்படுகிறது. அது அபூர்வமான முறையில் நிறைவேற்றப்படும் 12 ரக்அத்துகளைக் கொண்டதாகும். என அல்ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் (تبيين العجب بماورد في فضل رجب) என்ற நூலில் கூறியுள்ளார்கள்.

இமாம் அந்நவவீ (ரஹ்) அவர்கள் தம் "ஷரஹுல் முஹத்தப்" என்ற நூலின் 3/548 வது பக்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்கள். ஸலாதுர் ரகாஇப் என்று அறியப்பட்ட தொழுகை பன்னிரெண்டு ரக்அத்துகளைக் கொண்டது. அது ரஜப்மாத முதலாவது வெள்ளி இரவிலே தொழுப்படுகிறது. மேலும் ஷஃபான் மாதம் 15ம் இரவு நூறு ரக்அத்துகள் நிறைவேற்றப்படுகின்றன. இவ்விரண்டு தொழுகைகளும் (சன்மார்க்கத்தில் நுழைந்த) பித்அத்து (நவீனங்)களாகும். மிகவும் வெறுக்கபட்ட இரண்டாகும். கூத்துல் குலூப், இஹ்யாஉலுமித்தீன் போன்ற நூல்களில் இது கூறப்பட்டிருப்பதையோ இவைபற்றி கூறப் பட்ட ஹதீஸைக் கண்டோ நீர் மதிமயங்கி விடலாகாது. அவை அனைத்துமே அசத்தியமானவையாகும். அவையிரண்டு பற்றியும் மயக்கமானதீர்ப்பைக்கூறிய அறிஞர்களையிட்டு நீ மதிமயங்கி விடாதிருப் பாயாக. அவ்விரண்டையும் விருப்பத்துக்குரிய

அமல்களெனக் கூறி நூல்களை எழுதியுள்ளனர். நிச்சயமாக அவர்கள் தவறிழைத்தோரேயாவர்.

இவ்விடயமாக அஷ்ஷேக் அல்இமாம் அப்துர்ரஹ்மான் இப்னு இஸ்மாயில் அல்மக்திஸீ அவர்கள் ஒரு பெறுமதியான நூலை எழுதி மேற்குறித்த இரண்டு விடயமாகவும் அவை பிழையானது என்பதையும் அழகுறக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருக்கு அருள்புரிவானாக!

மேலும் ஷேகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் தம் ‹மஜ்மூஉல் பதாவா" 23/125வில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். "சன்மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த முடிவின் பிரகாரம் ஸலாத்துர் ரகாஇப் (எனும் தொழுகை) பித்அத்தாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ கலீபாக்களில் எவருமோ அதனை நபிவழியெனக் காட்டித் தரவில்லை. இமாம்களான மாலிக், ஷாபிஈ, அஹ்மத், அபூஹனீபா, ஸவ்ரீ, அவ்ஸாஈ, லைஸ் போன்ற இமாம்கள் எவரும் இதனை விருப்பத்துக்குரிய ஒன்றாகக் கூறவுமில்லை. அது பற்றி அறிவிக்கப்பட்ட ஹதீஸ் பொய்யென அக்கலை அறிஞர்கள் ஏகோபித்துக் கூறியுள்ளனர்."

மேலே குறிப்பிடப்பட்ட "அல்லதாஇப்" எனும் நூலின் ஆசிரியர் இமாம் இப்னு ரஜப் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் "ரஜப் மாதத்தில் நிறைவேற்றப் படவேண்டிய தொழுகைகள் ஏதும் கிடையாது. ரஜப் மாத முதல் வெள்ளியிரவு தொழப்படும் ஸலாத்துர் ரகாஇப் எனும் தொழுகை பற்றி அறிவிக்கப் பட்ட ஹதீஸ்கள்

பொய்யும் புரட்டுமாகும் எந்த ஒன்றுமே சரியானதல்ல" என்று கூறுகிறார்கள்.

மேலும் நம் முன்னோர் இது பற்றிக் கூறாதிருந்தது ஏனெனில் இத்தொழுகை அவர்களது காலத்துக்குப் பின்பு புதிதாக உண்டுபண்ணப்பட்டதாகும். ஹிஜ்ரி 400க்குப் பிறகே முதன் முதல் இது அறிமுகமானது. ஆதலால் தான் முன்னோர் இதுபற்றி அறியாதிருந்தனர். அதுபற்றிப் பேசவுமில்லை.

இமாம் அஷ்ஷவ்கானீ அவர்கள் தம் "அல்பவாஇதுல் மஜ்மூஅஹ்" (பக்கம் 48)வில் பின்வருமாறு கூறுகிறார்கள்: "ஹதீஸ்கலை வல்லுனர்கள் ஸலாத்துர் ரகாஇப் எனும் தொழுகை ஓர் இட்டுக்கட்டாகும் எனக் கூறிவிட்டு ஹதீஸ்க்கலையில் சொற்ப அறிவேனும் இல்லாத ஒருவனே இந்தப் பொய்யை (ஹதீஸை)க் கூறியுள்ளான் என்பதில் ஐயமில்லை". இமாம் பைரோஸ் ஆபாதீ "அல்முக்தஸர்" எனும் நூலில் இவ்வாறு கூறியுள்ளார்கள். "மேலும் இமாம் ஷவ்கானீ அவர்கள் குறிப்பிடுகையில் அனஸ் (ரழி) அவர்கள் வாயிலாக ஜௌஸ்கானீ என்பவர் அறிவிக்கும் ரஜப்மாத பதினைந்தாவது இரவின் சிறப்பு பற்றிய ஹதீஸ் புணைந்து கூறப்பட்டது. அறிவிப்பாளர்கள் யாவரும் பிரபல்யமற்றோர்" எனக் கூறியுள்ளார்கள்.

ஆறாவது: ரஜப் மாதத்தில் சில மக்கள் "ரஜபிய்யா"என்று சொல்லிக்கொண்டு மதீனாவை நோக்கிப் படையெடுக்கின்றனர். மிகவும் பிரதானமான ஒரு ஸுன்னத்தென இதனைஅவர்கள் கருதுகின்றனர். தாம் தரிசித்து ஸியாரத் செய்ய நாடிய இடங்களுக் கெல்லாம் சென்று ஸியாரத்

*செய்கின்றனர். அதிற்சில ஷரீஅத்தில் கூறப்பட்டஸியாரத் ஆகும். உதாரணமாக மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிது குபா, நபி(ஸல்) அவர்களதும் அபூபக்ர் உமர் (ரலி) ஆகியோரதும் கப்ருகள், ஜன்னதுல் பகீஉ அடக்கஸ்தலம், உஹுதிலே உயிர்த்தியாகிகள் அடக்கப்பட்ட இடம் முதலியன இதில் அடங்கும். ஷரீஅத்தில் கூறப்படாத சில ஸியாரத்துகளையும் செய்கின்றனர். உதாரணமாக மஸ்ஜிதுல் கமாமா, மஸ்ஜிதுல் கிப்லதைன், 7 பள்ளிகள் என்பன இதில் அடங்கும்.*

*இவ்வாறு "ரஜபிய்யா" என்ற பெயரில் செய்யப்படும் இந்த ஸியாரத் முறைக்கு அறிஞர்களது பேச்சில் எந்த அடிப்படையும் கிடையாது. அது பிற்காலத்தில் தோற்று விக்கப்பட்டது. புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட பள்ளிவாசல்களில் ஒன்று தான் மதீனாப்பள்ளி என்பதில் எந்த ஐயமுமில்லை. அந்த பள்ளிகள் (மக்காவில் உள்ள) மஸ்ஜிதுல் ஹராம் (மதீனாவிலுள்ள) மஸ்ஜிதுன் நபவி (பலஸ்தீனிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸா என்பனவாகும். எனினும் இவ்வாறான ஸியாரத்தை மாதம் குறிப்பிட்டு நாள்குறிப்பிட்டு செய்வதற்கு உரிய ஆதாரம் தேவை. ரஜப் மாதத்தைக் குறிப்பிட்டு எந்த ஆதாரமும் கிடையாது.*

*இதன்படி மேற்குறிப்பிட்ட விடயத்தை இம்மாதத்துக்கென வைத்துக்கொண்டு அல்லாஹ்வை நெருங்க நாடுவது மறுத்துரைக்கப்பட வேண்டிய ஒரு பித்அத்தாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "யார் எமது கருமங்களில் இல்லாததைச் செய்கிறாரோ அது திருப்பப்பட்டதாகும், மறுக்கப்பட்டதாகும்". அதாவது*

அவ்வாறு நூதனமாகத் தோற்றுவித்தவர் மீதே அது தூக்கியெறியப்படும்.

ஏழாவது: ரஜப் மாதத்தின் 27வது நாள் இரவில் தான் இஸ்ராஃ எனும் இராநடையும் மிஃராஜ் எனும் விண்ணுலக யாத்திரையும் நிகழ்ந்ததாக மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமாக உள்ளது. அதற்கென கொண்டாட்டங்களை நடாத்துகின்றனர். சில வேளை அந்நாளை அரசாங்க விடுமுறை யாகவும் ஆக்குகின்றனர். இதனை இரண்டு முறையில் உறுதிப் படுத்துவது அவசியாமாகும்.

ஒன்று: வரலாற்று அடிப்படையில்

அடுத்து: கொண்டாடுவதற்குரிய மார்க்க அடிப்படையில்.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால் இமாம் இப்னு கதீர் அவர்கள் தம் அல்பிதாயா வன்நிஹாயா 3/199ல் ஸுஹ்ரீ, உர்வா ஆகியோர் வாயிலாக பின்வருமாறு பதிந்துள்ளார்கள். அதாவது இஸ்ராவும் மிஃராஜும் நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ள ஒரு வருடத்துக்கு முன்பு அதாவது ரபீஉனில் அவ்வலில் நிகழ்ந்தது. அல்ஸுத்தீ என்பவர் வாயிலாக மேற்படிவிடயம் ஹிஜ்ரத்துக்கு 16 மாதங்களுக்கு முன் நிகழ்ந்தது என இடம் பெற்றுள்ளது. அப்படியாயின் அது துல்கஃதா மாதத்தில் நிகழ்ந்துள்ளது.

அல்ஹாபிழ் அப்துல்கனீ இப்னு ஸரூர் அல்மக்திஸீ நபி (ஸல்) அவர்களது வரலாற்றில் அறிவிப்பாளர் வரிசை உறுதியற்ற ஹதீஸொன்றைக் கூறுகிறார்கள். அதிலே இஸ்ராவும், மிஃராஜும் ரஜப் 27ல் நிகழ்ந்தது எனக்

குறிப்பிடுகிறார்கள். ரஜப் மாத வெள்ளி இரவன்று அது நிகழ்ந்ததாகவும் பிரபல்யமிகு ‹ஸலாத்துர் ரகாஇப்" எனும் தொழுகை தோற்றுவிக்கப்பட்டது என்றெல்லாம் சிலர் கூறும் இக்கூற்று எவ்வித ஆதாரமுமற்றதாகும் எனவும் குறிப்பிடுகின்றார்கள்.

அஸ்ஸபாரீனீ சரஹுல் அகீதா 2/280ல் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். இஸ்ராவும் மிஃராஜும் நபித்துவத்தின் பன்னிரெண்டாம் ஆண்டு ரமழான் 17ல் நிகழ்ந்தது என்கிறார்கள். அதாவது ஹிஜ்ரத்துக்கு 18 மாதங்களுக்கு முன்பு. வேறு சிலர் ஹிஜ்ரத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்பு ரபீஉனில் அவ்வல் 17ம் இரவு இஸ்ராவும் மிஃராஜும் நிகழ்ந்தது எனவும் குறிப்பிடுகிறார்கள். இதுவே ஏகோபித்ததென இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள். இப்னு அப்பாஸ் (ரழி), ஆயிஷா (ரழி) போன்றோரின் கருத்தும் இதுவே.

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தம் பத்ஹுல் பாரீ 7/203ல் (ஸஹீஹுல் புஹாரியின் விளக்கவுரை) மிஃராஜின் பாடத்தில் பின்வருமாறு எழுதுகின்றார்கள். நிச்சயமாக அறிஞர்கள் 10 கருத்துக்களைத் தாண்டுமளவு அபிப்பிராயப்பட்டனர். ஹிஜ்ரத்துக்கு 1 வருடத்துக்கு முன்பு என்ற கருத்து இப்னு ஸஃத் போன்றோருடையது, இமாம் நவவீ அவர்களும் இதனை உறுதிப் படுத்தியுள்ளார்கள். ஹிஜ்ரத்துக்கு முன் 18 மாதம், 6 மாதம், 11 மாதம், ஒரு வருடமும் 2 மாதங்கள், ஒரு வருடமும் 3 மாதங்கள், ஒரு வருடமும் 5 மாதங்களும், 3 வருடங்கள், 5 வருடங்கள் என பல்வேறு அபிப்பிராயங்கள் கூறப்பட்டுள்ளன. ரஜப்

மாதத்தில் நிகழ்ந்ததாக இப்னு அப்தில் பர் தெரிவிப்பதை நவவி (ரஹ்) அவர்கள் ரவ்ழா எனும் நூலில் உறுதி செய்தார்கள். இக்கூற்று அந்நூலில் காணப்படவில்லை என்று சில அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் தமது ஆசிரியரான இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் சில மாதங்கள், நாட்கள் மற்றவைகளை விட சிறப்படைவது பற்றிக் கேட்கப்பட்ட வினாவுக்கு பின்வருமாறு விடையளித்ததாக தம் (ஸாதுல் மஆத் எனும் நூலில்) குறிப்பிட்டுள்ளார்கள். இராநடை நடந்த இரவு லைலத்துல் கத்ர் இரவைவிட சிறந்தது எனக்கூறுபவன் அதன் மூலம் வருடாந்தம் வரும் லைலத்துல் கத்ர் இரவன்று நின்று வணங்குவது துஆக்கேட்பது என்பவைகளைவிடவும் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தவருக்கு சிறந்தது என்ற கருத்தில் கூறுவானாயின் அது முற்றிலும் பிழையானதாகும். முஸ்லிம்களில் எவருமே இவ்வாறு சொல்லவில்லை. இஸ்லாத்தின் அடிப்படையில் முற்றிலும் பிழையென அறியப்பட்ட ஒன்றாகும். இவ்வாறு இராநடை (அல்இஸ்ராஉ) நிகழ்ந்தது என அறியப்பட்டிருப்பின் அதன் மாதம், காலம், என்பன பற்றியோ அது பற்றியோ ஆதாரப்பூர்வமாக நிலை நிறுத்தப்படவில்லை. மாறாக அதுபற்றி அறிவிக்கப்பட்டவை யாவும் வித்தியாசமான வைகளாகும் தொடர்பற்றதாகும். திட்டப் படுத்திக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. “இஸ்ராஉ” உடைய இரவென எண்ணப்படும் நாளில் நின்று வணங்கவோ வேறேதும் அமல் புரியவோ முஸ்லிம்களுக்கு மார்க்கமாக

அனுமதிக்கப்பட வில்லை.

மேலும் இஸ்ராவுடைய இரவை மற்றவைகளை விட குறிப்பாக லைலதுல் கத்ர் இரவை விட எவருமே சிறப்பாக்கினர் என அறியப்படவுமில்லை. யாரும் கூறியதாகவுமில்லை. ஸஹாபாக்களோ தாபிஈன்களோ “இஸ்ராஉ” உடைய இரவை குறிப்பிட்ட காரியங்களை வைத்து நாடினார்கள் என்றும் அறியப்படவில்லை. எனவேதான் எந்த இரவிலே அது நிகழ்ந்தது என்று கூட அறியப்படவில்லை.

இதுவே “இஸ்ராஉ மிஃராஜ்” தொடர்பான முதல்விடயம். எந்த இரவு எந்த மாதம் எந்த வருடம் என்பது வரலாற்று ரீதியாக நிருவப்படவில்லை.

இரண்டாவது விடயம் யாதெனில் மிஃராஜுடைய இரவைக் கொண்டாட்டம் நடத்துவதற்க்குரியதாக வைத்திருப்பதாகும். அவ்விரவில் பேச்சுக்கள் பிரசுரங்கள் ஏற்பாடு செய்து இஸ்ராஉ மிஃராஜ் பற்றி வந்துள்ள பலவீனமான புணைந்து கூறப்பட்ட செய்திகளை ஓதுவதும் வாசிப்பதுமாகும். இவ்வாறு செய்வது இஸ்லாத்தில் உருவாக்கப்பட்ட பித்அத்துகள் எனப்படும் நவீனமானவையாகும் என்பதை எவரும் சந்தேகிக்க மாட்டார்கள். மனோ இச்சைகளைக் களைந்து சத்தியத்தை அறிய நாடுபவன் மேற்கண்டவாறே புரிந்து கொள்வான்.

அவ்விரவில் ஏற்பாடு செய்யப்படும் கொண்டாட்டம் ஸஹாபாக்களுடைய காலத்திலோ தாபிஈன்கள் காலத்திலோ அறியப்பட்டிருக்கவில்லை. இஸ்லாத்தில் மூன்றே மூன்று

பெருநாட்களன்றி வேறு ஒன்றும் கிடையாது. ஈதுல் பித்ர் (நோன்புப் பெருநாள்) ஈதுல் அல்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) என்பன வருடாந்தம் வந்து செல்பவையாகும். மூன்றாவது வாராந்தப் பெருநாளான ஜும்ஆ நாளாகும். இம்மூன்றைத் தவிர வேறொரு பெருநாளும் இஸ்லாத்தில் கிடையாது.

அறிந்து கொள்க! நபி(ஸல்) அவர்களை பின்பற்றுவது என்பதன் உண்மை யாதெனில் அன்னார் செய்தவைகளை செய்வதும், விட்டவைகளை விடுவதும், அன்னாரின் வழிமுறைகளைப் பின்தொடர்வதுமாகும். அதில் கூட்டி அல்லது குறைத்துச் செய்பவன் அன்னாரைப் பின்தொடர்வதில் குறைவு செய்தவனாவான். கூட்டிச் செய்வதென்பது மாபெரிய குற்றமாகும். ஏனெனில் அது அல்லாஹ்வையும் ரஸூலையும் மிஞ்சி முன்செல்லும் குற்றமாகும். அன்னாரைப் பின் தொடர வேண்டிய நியாயங்கள் இருக்கையில் அதற்கு மாறாக நடப்பது மாபெரிய பாவமாகும், குற்றமாகும் என்பதை ஒரு விசுவாசியென்ன புத்தியுள்ள எவரும் சந்தேகம் கொள்ள மாட்டான். ஒரு முஃமினைப் பொருத்தவரை அல்லாஹ் தன் தூதர் மூலம் சரீஅத் ஆக ஆக்கித்தந்ததை வைத்து வணங்கி வழிப்படுவது நிரப்பமான ஈமானுக்குப் போதுமாகும். அவ்வாறே அல்லாஹ்வும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களும் கொண்டு வந்ததைவிடக் குறைப்பதானது ஈமானின் குறைவேயாகும்.

எனவே அல்லாஹ்வின் சன்மார்க்கத்தில் தன் மனோ இச்சைப்பிரகாரம் நூதனங்களை உண்டு பண்ணுவதிலிருந்து முஃமின்கள் எச்சரிக்கையாக இருக்க

*வேண்டும். நபி(ஸல்) அவர்கள் ஜும்ஆப் பிரசங்கங்களில் எச்சரிக்கை செய்து வந்தார்கள். "நிச்சயமாக செய்திகளிற் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகளிற் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழியாகும். கருமங்களிற் கெட்டது நூதனமானவயாகும். நூதனங்கள் அனைத்தும் வழிகேடாகும்" (ஸஹீஹ் முஸ்லிம்). வேறோர் அறிவிப்பில் "வழிகேடுகள் அனைத்தும் நரகத்திலாகும்" (நஸாஈ).*

*ஈருலக வாழ்விலும் உறுதிமிக்க வார்த்தைகள் மூலம் நிலைபெற்றிருக்க அருள்புரிய வேண்டுமென அல்லாஹ்விடம் வேண்டுகிறேன். இரகசியமாகவும் பரகசியமாகவும் உள்ள சகல சோதனைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டுமென அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன். நிச்சயமாக அவன் தயாளமானவன் கொடைகொடுப்பவன்.*

*(மேற்கண்ட பிரசங்கம் "ஸுன்னாவைக் கடைப்பிடிப்பதும் அதன் பிரதி பலன்களும்" என்ற தலைப்பில் மதீனா இஸ்லாமிய பல்கலைகழக மாநாட்டு மண்டபத்தில் 09-07-1419 வியாழன் இரவு அஷ்ஷேக் ஸாலிஹ் அல்உதைமீன் (ரஹ்) அவர்களால் ஆற்றப்பட்டது)*





IslamHouse.com

@IslamHousebn islamhousebn islamhouse.com/bn/

Bengali.IslamHouse user/IslamHouseBn

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

Guidetolslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com


المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

هاتف: ٠٠٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٠٠٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧

ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# ஸுன்னாவைப் பின்பற்றுவதன் அவசியம்

இந்நூல்: மதீனாவில் அமைந்துள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் அஷ்ஷேஹ் முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்) ஹிஜ்ரி 1419 ம் ஆண்டு ஆற்றிய உரையின் எழுத்து வடிவம். இவ்வுரையானது நபியவர்களின் ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும், அது பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகளையும், மற்றும் ஸலபுகளின் கூற்றுக்களையும் உள்ளடக்கியுள்ளதுடன் சில உதாரணங்களையும் மதிப்புக்குரிய ஷேஹ் அவர்கள் விளக்கிக் கூறுயுள்ளார்.




IslamHouse.com
Osoul Center
www.osoulcenter.com
Rabwah